# கீழைத்தேய சங்கீதம்

## பாடத்திட்டம்

# தரம் 10

**( 2015ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பெறும்)**

**அழகியற்கல்வித் துறை**
**தேசிய கல்வி நிறுவகம்**
**மஹரகம**
**www.nie.lk**

# அறிமுகம்

புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கமைய தேர்ச்சியை மையமாகக் கொண்ட கலைத்திட்டமானது 2015ஆம் ஆண்டிலிருந்து தரம் 10 இற்கு அமுலாக்கப்படுகின்றது. இப்பாடத்திட்டமானது 9 பிரதான தேர்ச்சிகளை அறிமுகப்படுத்துவதுடன், இத்தேர்ச்சிகள் கீழைத்தேய சங்கீதத்தை ஒரு பாடமாகக் கற்கும் மாணவரில் விருத்தி செய்து கொள்ளப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மாணவர், தரம் 10 இற்குரிய அடிப்படைத் தேர்ச்சி மட்டங்களை அடைந்துகொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இவற்றுடன் கலைத்திட்டச் சீர்திருத்தமானது இப் புதிய நூற்றாண்டில் மாணவர்கள் தாம் தெரிந்தவற்றை மறைத்து வைப்பதற்குப் பதிலாக அவற்றை வெளிக்காட்டுவதற்கும் இருக்கின்றதை மீள வெளிப்படுத்துவதற்கும் அவர்களை வழிநடத்த அவசியமாவதுடன் எதிர்காலத் தேவைகளுக்காகக் கட்டியெழுப்புவதற்கும் அத்தியாவசியமாகவுள்ளது.
இந் நோக்கமானது தேர்ச்சி மையக் கலைத்திட்டம் மற்றும் செயற்பாட்டு மையக் கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள் மூலம் மேலும் விருத்தி செய்யப்படலாம்.

இப்புதிய பாடத்திட்டமானது கீழைத்தேய சங்கீதச் செய்முறைப் பரீட்சைச் சபையிடமிருந்து பெற்றுக்கொண்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டும் விசேடமாக விருத்திசெய்து கொள்ளப்பட வேண்டிய பாடப்பரப்புக்கள் சம்பந்தமாகத் தேசிய மட்டப் பரீட்சையாளர்களின் அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டும் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும், இப்பாடத்திட்டத்தை ஒழுங்கமைக்கும் போது மாகாணமட்ட கற்றல் வட்டங்கள், பாடத்திட்டத்தை அமுலாக்கும் முகமாகப் பாடசாலைகளை அவதானித்துப் பெறப்பட்ட ஆய்வறிக்கைகள், வலய மட்டத்தில் நடைபெற்ற பரீட்சைகளிலிருந்து பெறப்பட்ட தகவல்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் புலமையாளர்களின் அபிப்பிராயம், அரச பாதுகாப்பு அமைச்சின் பாண்ட் வாத்தியக் குழுவின் கருத்து, இசையில் புலமை பெற்றவர்களின் எண்ணங்கள், இலத்திரனியல் ஊடகங்களில் ஒலிபரப்பப்பட்ட கலந்துரையாடல்கள் மற்றும் நிகழ்ச்சிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் பாடசாலையில் கீழைத்தேய சங்கீதத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் விருப்புக்கள் போன்றவற்றில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

சங்கீதத்தை அழகியற் கல்வியின் கீழ் கற்பதன் மூலம் மாணவர் பாடசாலை நாட்களில் மட்டுமன்றி அவர்கள் பாடசாலையில் இருந்து விலகிய நாள்களிலும் அவசியப்படும் உள் உணர்வுகளை மற்றும் வாழ்க்கைத் தேர்ச்சிகளை விருத்தி செய்யலாம். சாஸ்திரிய இசையை ஒரு பாடமாகக் கற்பிப்பதன் பிரதான நோக்கம் உயர்ந்த திறமையுடைய முழுமையான கலைஞரை உருவாக்குவதைப் பிரதானமாக எதிர்பார்க்காவிட்டாலும் வாழ்க்கைக்குத் தேவையான உணர்ச்சியும் இரசிக்கும் திறனுமுடைய, பல்வேறுபட்ட இசைப் பாரம்பரியங்களின் அனுபவங்களைச் சாதாரண வாழ்க்கையிற் பயன்படுத்தி உயர்ந்த ஒரு திருப்தியும் இரசனையுமுடைய பிரஜையை உருவாக்குவதாகும்.

இப் பாடத்திட்டத்தைப் பின்பற்றுவதன் மூலம் மாணவரை நவீன உலகிற்கேற்றவாறு திறமைவாய்ந்த முழுமையடைந்த ஒரு ஆரோக்கியமான நபராக உருவாக்கித் தருவதற்கும் இசைக்கருவிகளை வடிவமைத்தல், இசை உருவாக்கங்கள் மற்றும் இசைத் தொழினுட்பம் போன்றவற்றில் திறமையை வளர்த்து விடுவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

# தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்கு உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகாலக் கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத் திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினைத் தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

i.. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணகருவுக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலம் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

ii.. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

iii.. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு, என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

vi. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்

v.. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.

vi.. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போசிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்குக் கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

vii.. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்ப்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.

viii.. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

# அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

(I) தொடர்பாடற் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவற் தொழினுட்பத் தகைமை.

| | |
|---|---|
| எழுத்தறிவு: | கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும், செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையான கருத்துப் பரிமாற்றம் |
| எண்ணறிவு: | பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல் |
| சித்திர அறிவு: | கோடு, உருவம் என்பவற்றின் கருமத்தை அறிதல், விவரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றைக் கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும் |
| தகவற் தொழினுட்பத் தகைமை: | கணினி அறிவு, கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்விற் தகவற் தொடர்பாடல் தொழினுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல். |

(II) ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டு பிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
- மன எழுச்சிகள், நுண்ணறிவு

(III) சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம்.

சமூகச் சூழல்: தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையிற் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறை

உயிரியற் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழற் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு.

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருள்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்பணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

IV). வேலை உலகத்திற்கு தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்

- அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போசிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.
- பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்.
- அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்.
- அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்.
- பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்.

(V) சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்.

(VI).ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவைபோன்ற மனித அனுபவங்கள்.

(VII) ‘‘கற்றலுக்குக் கற்றல்’’ தொடர்பான தேர்ச்சிகள்

விரைவாக மாறுகின்ற, சிக்கலான ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

(மூலம் : தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை - 2003)

# கீழைத்தேய சங்கீத பாடத்திற்கான பொதுவான தேர்ச்சிகள்

1.0 பாடுதல் மற்றும் இசைத்தலில் செய்முறைத் திறன்களைக் காண்பிப்பார். இசையின் அடிப்படைகளை, நுட்பங்களை மற்றும் கோட்பாடுகளை இனங்காண்பார்.

2.0 இசைக்கருவிகளை இசைப்பதற்கான திறனையும் அதனை அறிந்து கொள்ளும் திறனையும் காண்பிப்பார்.

3.0 இசையை நயப்பதன் மூலம் மகிழ்ச்சிகரமான வாழ்வினைப் பேணக்கூடிய மனநிலையைப் பெறுவார்.

4.0 சுதேசிய கிராமிய இசை அடிப்படை செய்முறைத் திறன்களை வளர்ப்பதன் மூலம் கலாசார பாரம்பரியங்களைப் பாதுகாப்பார்.

5.0 சாஸ்திரீயம் அல்லாத இசையுடன் தொடர்புடைய இசை அடிப்படைகளின் அனுபவத்தைப் பெறுவார்.

6.0 நாடகப் பாரம்பரியத்தின் சிறப்பம்சங்களை கற்பதன் மூலம இசைசார் சிறப்பியல்வுகளின் செய்முறை அனுபவத்தினைப் பெறுவார்.

7.0 இசையின் ஆக்கத்திறன் செயற்பாடுகளை ஆராய்வார்.

8.0 இசையைக் குறியீடாகப் பதிவு செய்யும் முறையை இனங்காண்பதன் மூலம் உலகளாவிய இசைச் செயற்பாடுகளை மேற்கொள்ளத் தேவையான அடிப்படைத் தேர்ச்சிகளை வளர்பதுடன் சுதேசிய இசையின் அடிப்படைகளை உலகிற்கு எடுத்துச் செல்வார்.

9.0 தொழினுட்ப சாதனங்களை மற்றும் இசையின் பௌதிக அடிப்படைகளைக் கற்பதுடன் மேலும் வெற்றியளிக்கக்கூடிய ஆற்றுகைத் திறன்களை வழங்குவார்.

10. இணையம் ஊடாகக் கணினியானது எவ்வாறு இசையைக் கற்க, பாதுகாக்க மற்றும் உருவாக்கப் பயன்படுகின்றது என்பதைச் செய்முறை ரீதியாக இனங்காண்பார்.

11. நவீன வியாபார உலகத்திற்கு ஏற்ற இசைக்கருவிகளின் உற்பத்தியை ஊக்குவிப்பார்.

# தரம் 10 பாடத்திட்டம்

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 1.0 பாடுதல் மற்றும் இசைத்தலில் செய்முறைத் திறன்களைக் காண்பிப்பார். இசையின் அடிப்படைகளை, நுட்பங்களை மற்றும் கோட்பாடுகளை இனங்காண்பார். | 1.1. ஆரோகண மற்றும் அவரோகண பொது நிலையிலிருந்து விலகும் குறியீடுகளுடன் ராகங்களைப் பாடுதல், இசைத்தல் மற்றும் இனங்காண்பதற்கான திறனை வளர்த்துக் கொள்வார். | • பைரவி மற்றும் யாமன் ராகங்களின் விவரத்துடன், அவற்றை விளக்குகின்ற பாடல்கள்.<br>• குரல்வளப் பயிற்சிகளை மேற்கூறிய ராகங்களிற் பழகுதல்.<br>• மேற்கூறிய ராகங்களின் சர்க்கம்.<br>• மேற்கூறிய ராகங்களில் மத்திய தாளப் பாடல்கள். | • ஸ்வரங்கள், சாகம் மற்றும் லக்ஷன கீ போன்றவற்றின் பயிற்சியினைப் பயன்படுத்திப் பைரவி மற்றும் யாமன் ராகங்களுடன் தொடர்புடைய செய்முறைத் திறன்களை வெளிக்காட்டுவார்.<br>• லக்ஷன கீ இனைப் பயன்படுத்திப் பைரவி மற்றும் யாமன் ராகங்களை விவரிப்பார்<br>• ராகங்களின் பயிற்சியானது சங்கீதத்திற் தேர்ச்சி பெறுவதற்கு மிக முக்கியம் என்பதை ஏற்றுக் கொள்வார். | 04<br>02<br>02<br>04 |
| | 1.2 இந்துஸ்தானி தாள பாத இசையுடன் அவனாத்ஹக்ஷரய எவ்வாறு தொடர்புடையது தபேலாவில் எவ்வாறு எழுப்பப்படுகின்றது என்பதனை ஆராய்வார் மற்றும் செய்முறை மூலம் கற்பார். | • அவனாத்தாக்ஷர இந்துஸ்தானி தாளபத மற்றும் தபேலாவில் அவற்றை எவ்வாறு இசைத்தல். | • தபேலாவின் பகுதிகளை இனங்காண்பார் மற்றும் அவனாத் தாக்ஷர எவ்வாறு உருவாக்கப்படுகின்றது என்பதை விவரிப்பார்<br>• தபேலாவில் இந்துஸ்தானி தாள பத இனை இசைக்கக் கூடியதாக இருப்பார். | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 2.0 இசைக்கருவிகளை இசைப்பதற்கான திறனையும் அதனை அறிந்து கொள்ளும் திறனையும் காண்பிப்பார். | 2.1 இசைக் குறியீடுகளை வாசித்தல் மற்றும் இசைத்தல். | • இசைக் குறியீடுகளை வாசிப்பதற்கான நுட்பம்.<br>• மெட்டினை இசைக் குறியீடுகளாக எழுதுவதற்கான நுட்பம்.<br>• இசைக் குறியீடுகளை வாசித்து கீபோர்ட் இசைக்கருவிகளில் இசைத்தல்.<br>• இசைக் குறியீடுகளை தெரிவு செய்த இசைக் கருவிகளில் இசைத்தல். | • இலங்கையில் பிரயோக இசையிற் பயன்படுத்தப்படும் இசைக் குறியீடுகளை இனங்காண்பார் மற்றும் குறியீடுகளை வாசிக்கக் கூடியதாக இருப்பார்.<br>• நிபுணத்துவம் பெற்ற இசைக் கலைஞருக்குரிய அடிப்படைத் திறன்களை வளர்ப்பார்.<br>• தெரிவு செய்யப்பட்ட இசைக்கருவியை இசைக்கக் கூடிய திறன்களைக் காண்பித்து தகுதியான இசைக்கலைஞராக வளர்வார். | 02<br>02<br>03<br>03 |
| 3.0 இசையை நயப்பதன் மூலம் மகிழ்ச்சிகரமான வாழ்வினைப் பேணக்கூடிய மனநிலையைப் பெறுவார். | 3.1 பிரயோக இசை வளர்ச்சியின் பல்வேறு கட்டங்களை இனங்காண்பார், பாடுவார் மற்றும் ஒவ்வொரு காலகட்டத்திற்கும் உரிய பாடல்களை நயப்பார். | • "கிராமபோன் றெக்கோட்" காலத்திற்குரிய தேர்ந்தெடுக்கப்பட்ட பாடல்கள்.<br>• ஆரம்பகால வானொலி ஒலிபரப்பிற்குரிய "சரள கீ" பாடல்கள் மற்றும் அவற்றின் வளர்ச்சிக்குப் பங்களிப்பாற்றிய இசைக்கலைஞர்கள்.<br>• "கபிறினா" பாடல்களின் தன்மை | • "கிராமபோன் பாடல்கள், ஆரம்ப கால வானொலி ஒலிபரப்பிற்குரிய "சரள கீ" மற்றும் கபிறினா" பாடல்களின் இயல்புகளை வேறுபடுத்துவார்.<br>• மேற்கூறிய பாடல்களைப் பாடுவார் மற்றும் நயப்பார்.<br>• மேற்கூறிய பாடல்களை உருவாக்கியவர்களைப் பாராட்டுவதுடன் அப்பாடல்கள் பாதுகாக்கப்பட வேண்டியவை என்பதை ஏற்றுக் கொள்வார். | 02<br>02<br>02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 3.2 இலங்கையில் இசையின் வளர்ச்சியில் பங்காற்றிய கலைஞர்களை மதிப்பார் மற்றும் அவர்களின் படைப்புக்களை நயப்பார். | • டபிள்யூ. பி. மகுலொலுவ (தெபானோவிலிருந்து).<br>• சி. டி. எஸ். குலதிலக (தாதெட்ட வலலு).<br>• றொகான பத்தஷே (மல்சறோ).<br>• லயனல் றன்வல (கம அவுலஞ்ஞுய்). | • சுதேசிய கிராமிய இசையை வளர்ப்பதற்கு அர்ப்பணிப்புச் செய்த இசைக் கலைஞர்களின் வாழ்க்கை வரலாற்றுத் தகவல்களைச் சேகரிப்பார்.<br>• அவர்களால் உருவாக்கப்பட்ட படைப்புக்களையும், சேவைகளையும் முன்னிலைப்படுத்துவார் மற்றும் பாராட்டுவார். | 05<br>02<br>02<br>02<br>02 |
| | 3.3 தற்போதைய வட இந்திய சாஸ்திரீய இசைக் கலைஞர்களை இனங்காண்பார் மற்றும் அவர்களின் படைப்புக்களை நயப்பார். | • ஷரிபிரசாத் ஷவுறஷியா, ரவி சங்கர், சஹீர் குசைன், ஜக்ஜித் சிங் மற்றும் ரகுமான் | • இந்திய இசைக் கலைஞர்களின் வாழ்க்கை வரலாற்றுத் தகவல்களைக் கற்பார்<br>• மேற்கூறிய கலைஞர்களின் இசை உருவாக்கங்களை நயப்பார். | 04 |
| | 3.4 ஆற்றுகையின் மூலம் பெறப்பட்ட இசை அனுபவங்களை நயப்பார். | • வருடாந்த கலைவிழா. | • பாடுதல் மற்றும் இசைக்கும் திறன்களை ஆற்றுகை மூலம் மேலும் வளர்த்துக் கொள்வார்.<br>• குழுவாக, தனியாக மற்றும் செயற்பித்தல் போன்ற பல்வேறுபட்ட ஆளுமைப் பண்புகளுடன் தொடர்பான அனுபவங்களை பெறுவார். | 06 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 4.0 சுதேசிய கிராமிய இசையின் அடிப்படைகளின் செய்முறைத் திறன்களை வளர்ப்பதன் மூலம் கலாசார பாரம்பரியங் களைப் பாதுகாப்பார். | 4.1 சிங்கள சரணங்களைப் பாடுவார். கவி சொல்லுதலின் தன்மையை அறிந்து கொள்வார். | • ‘‘சே கீ’’ பாடலின் தன்மை.<br>• சரணங்களைச் சொல்லுவார். ‘‘செலலிஹினி சந்தேஷய’’ மற்றும் ‘‘குத்திலய காவ்ய’’ இல் இருந்து. | • ‘‘செலலிகிம்’’, ‘‘சந்தேஷய’’ மற்றும் ‘‘குத்தில கவ்யக’’ இன் சரணங்களைப் பாடுவார்.<br>• பல்வேறுபட்ட தாள நடைகளைக் கொண்ட பாடல்களின் பாரம்பரிய தாள வடிவங்களைக் கற்பார்<br>• ‘‘சே கீ’’ இனை விவரிப்பார் மற்றும் கவிதைகளை எழுதுவதுடன் சரணங்களை ஒப்புவிப்பார். | 04 |
| | 4.2 கிராமியப் பாடல்களை வகைப்படுத்தி அவற்றின் ஒவ்வொரு வகைக்கும் உரிய பாடல்களைச் செய்முறையிற் கற்பார். | • கிராமியப் பாடல்களை வகைப்படுத்தல் மற்றும் கிராமியப் பாடல்களின் வேறுபட்ட வகைகளும். (மெஹே கீ, பெத்தி கீ, சாமஜ கீ, கல் கவி, பெல் கவி, பாரு கவி, பதல் கவி).<br>• ஆஹாதாத்மக மற்றும் அனாஹாத்தாத்மக தன்மை. கெமி கீ - சாதாரணமாக மற்றும் செய்முறையில். | • கிராமியப் பாடல்களைப் பிரித்தறிவார். பாரம்பரிய தாள வடிவங்களுக்குரிய ஒவ்வொரு பாடல்களையும் பாடுவார்.<br>• கிராமியப் பாடல்களை விவரிப்பதுடன் அவற்றை உருவாக்கிய காரணிகளை ஆராய்வார்.<br>• ‘‘ஆஹாதாத்மக’’ மற்றும் ‘‘அனாஹாத்தாத்மக ’’ இயல்புகளின் வேறுபாடுகளைச் செயன்முறையாற் காண்பிப்பார். | 06 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | | | • கிராமியப் பாடல்களை வகைப்படுத்துவதுடன் அப்பாடல்கள் எதிர்கால சந்ததியினருக்காகப் பாதுகாக்கப் படவேண்டியவை என்பதை ஏற்றுக்கொள்வார். | |
| 5.0 சாஸ்திரீயம் அல்லாத இசையுடன் தொடர்புடைய இசை அடிப்படைகளின் அனுபவத்தைப் பெறுவார். | 5.1 வட இந்திய சினிமா பாடல்களை பாடுவார் மற்றும் நயப்பார். அவற்றின் ராகங்களின் பின்னணியைப் பற்றி கலந்துரையாடுவார்.<br><br>5.2 இலங்கையின் மெல்லிசைத் துறையிற் காணப்படும் பெற்றோரைப் போற்றும் பாடல்களை நயப்பார் மற்றும் பாடுவார். | • பவுஜி பவ்ற, மதுமதி, அபிமான், தேவதாஸ் மற்றும் ஜனக் ஜனக் பாயல் பாதேஜ போன்றவற்றிலிருந்து ஒரு பாடல்.<br><br>• கந்துலு ஹெல நெம்பிலியற்ற / இப்பதும த ம ஹந்த வெற்றெநெற்றி /கமற்ற கலின் ஹிரு. | • ராகங்களுடன் தொடர்புபட்ட வட இந்திய திரைப்படப் பாடல்களை நயப்பார்.<br><br>• தாயின் மகிமையை எடுத்துரைக்கும் “சரள கீ” பாடல்களைப் பாடுவார் மற்றும் நயப்பார். | 03<br><br>03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 6.0 நாடகப் பாரம்பரியத்தின் சிறப்பம்சங்களைக் கற்பதன் மூலம் இசைசார் சிறப்பியல்புகளின் செய்முறை அனுபவத்தினைப் பெறுவார். | 6.1 பல்வேறுபட்ட பாணிகளினாற் செல்வாக்குச் செலுத்தப்பட்ட நாடகத்தின் புதிய பாரம்பரியங்களைப் புரிந்துகொண்டு பாடுவார். | • நவீன நாடகத்தில் "நாடகப் பாணி"யின் (மனமே சிங்கபாகு, மஹாசரா மற்றும் காலகோள ஊடாக)<br>• ஒவ்வொரு நாடகத்திலிருந்தும் ஒரு பாடலைப் பாடுதல் அன்றேல் இசைத்தல். | 1 நாடகப் பாரம்பரியத்தை தழுவித் தயாரிக்கப்பட்ட இலங்கையின் நவீன நாடகங்களைப் பற்றி அபிப்பிராயத்தைத் தெரிவிப்பார்<br>2 மனமே மற்றும் சிங்கபாகு பாடல்களை பாடியும் இசைத்தும் நயப்பார். | 04 |
| 7.0 இசையின் ஆக்கத்திறன் செயற்பாடுகளை ஆராய்வார். | 7.1 பாடல் வரிகளையும் மெட்டுக்களையும் உருவாக்கி இசையமைத்தலின் சிறப்பியல்புகளைத் தெரிந்து கொள்வார். | • எவ்வாறு பாடலுடன் பாடல் வரிகள் சேர்கின்றது.<br>• தலைப்பிற்கேற்ப பாடல் வரிகளை இயற்றுதல்.<br>• தகுந்த மெட்டுக்களை உருவாக்குதல்.<br>• வசனம் எவ்வாறு பாடலாகின்றது.<br>• இசை உரையாடல். | 1. வெற்றியடைந்த பாடல்களின் சிறப்பியல்புகளை எடுத்துரைப்பார்.<br>2 பாடலொன்றின் மெட்டிற்கும் பாடல் வரிக்களுக்கும் இடையிலான ஒற்றுமையை விவரிப்பார்.<br>3 கவிதைகளைத் திறந்த மற்றும் வெறுமை என வகுப்பார்.<br>4 கவிதையை பாடலாக மாற்றும் உபாயத்தை ஆராய்வார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 8.0 இசையைக் குறியீடாக பதிவு செய்யும் முறையை இனங்காண்பதன் மூலம் உலகளாவிய இசைச் செயற்பாடுகளை மேற்கொள்ளத் தேவையான அடிப்படைத் தேர்ச்சிகளை வளர்பதுடன் சுதேசிய இசையின் அடிப்படைகளை உலகிற்கு எடுத்துச் செல்வார். | 8.1 பாடல் வரிகளை இசைக் குறியீடுகளுடன் சேர்ப்பார்.<br><br>8.2 குறியீட்டு முறைகளின் அடிப்படைத் திறன்களை வெளிக்காட்டுவார்.<br><br>. | • பாடல்களுக்குரிய இசைக் குறியீடுகளை ஜப்தல் மற்றும் தீப்சந்தி தாளங்களை கொண்டு உருவாக்குவார்.<br>• விஷாமாகரகா மற்றும் அவஹராக கொண்டு பாடல் வரிகளை குறியிடுவார் | 1 பல்வேறுபட்ட தாள வகைகளுக்குரிய இசைக் குறியீடுகளை எழுதுவதற்குரிய ஆற்றலைக் காண்பிப்பார்.<br>2 சமகிரக, விஷாமாகரகா மற்றும் அவஹராக போன்றவற்றிற்கிடையிலான வேறுபாடுகளை விவரிப்பார். (சரியான தாளம், பிந்திய தாளம், முந்திய தாளம்)<br>3 வேறுபட்ட தாளங்களைக் கொண்டு மெட்டுக்களை உருவாக்கலாம் என்பதனை ஏற்றுக் கொள்வார். | 01<br><br>01<br><br>06 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 9.0 தொழினுட்ப சாதனங்கள் மற்றும் இசையின் பௌதிக அடிப்படைகளைக் கற்பதன் மூலம் வளமுடைய ஆற்றுகையை வழங்கக்கூடியதாக இருப்பார். | 9.1 ஒலியின் சிறப்பியல்புகளை மற்றும் பௌதிக அடிப்படைகளை ஆராய்வார். | • ஒலியின் உருவாக்கமும் பரவலும்.<br>• சுருதி, அலைவீச்சு, பண்பு<br>• ஏழு ஸ்வரங்களின் அதிர்வெண்.<br><br>• கணினியைப் பயன்படுத்தி இசையைக் கேட்டல், இசைத்தல்<br>• இலத்திரனியல் கற்றல், இலத்திரனியல் இசை(மிடி)<br>• இலத்திரனியல கலைக்களஞ்சியம் மற்றும் இசை.<br>• இசையை இணையம் மூலம் கற்றல். | • இரைச்சல்களையும் ஒலிகளையும் வேறுபடுத்துவார் மற்றும் ஒப்பிடுவார்.<br>• ஒலி உருவாக்கத்தை மற்றும் ஒலியின் பண்புகளை விஞ்ஞான ரீதியில் சிந்திப்பார்.<br>• ஸ்வரங்களின் அதிர்வெண்ணைக் கணிப்பார்.<br>• இசையின் பௌதிக அடித்தளத்தை பகுப்பாய்வார்.<br><br>• இசையைக் கற்பதற்கும் உருவாக்குவதற்கும் கணினியை உபயோகிப்பார்.<br>• இணையத்தைப் பயன்படுத்தி மேலும் இசையைக் கற்பார். | 08 |